# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1959/9 - 2016 මාර්තු මස 23 වැනි බදාදා - 2016.03.23

*1959/9 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 23 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### கிழக்கு மாகாண மாகாண சபை

*கிழக்கு மாகாண மாகாண சபையின் 2009 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கிழக்கு மாகாண வீதிப்பயணிப் போக்குவரத்து அதிகார சபைச் சட்டத்தின் கீழ் சட்டமாக்கப்படும் கட்டளைகள் மற்றும் ஒழுங்குவிதிகள்*

*2009 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கிழக்கு மாகாண வீதிப்பயணிப் போக்குவரத்து அதிகார சபைச் சட்டத்தின் 30 (1), 30(2) (i), (ii), (iii) ஆவது பிரிவில் மற்றும் உப பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் சட்டமாக்கப்படும் கட்டளைகள் மற்றும் ஒழுங்குவிதிகள் இதன் மூலம் பகிரங்கப்படுத்தப்படுகிறது.*

சற். ஏ. நஸீர் அஹமட்,
முதலமைச்சர் மற்றும் நிதி,
திட்டமிடல், சட்டமும் ஒழுங்கும், மாகாண மற்றும்
பிரதேச நிர்வாகம், கிராம அபிவிருத்தி, சுற்றுலா மற்றும் சூழல்,
கட்டிடங்கள் மற்றும் நிர்மாணம், போக்குவரத்து, கிராமியக்
கைத்தொழில் மற்றும் வீடமைப்பு அமைச்சர்,
கிழக்கு மாகாணம்.

1. கிழக்கு மாகாண மாகாண சபையின் 2009 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கிழக்கு மாகாண வீதிப்பயணிப் போக்குவரத்து அதிகார சபைச் சட்டத்தின் 30 (1), 30(2) (i), (ii), (iii) இன் பிரகாரம் சட்டமாக்கப்படும் கட்டளைகள் கீழ்வருமாறு காட்டப்படுகிறது. அதனை **"2015 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, வீதிப்பயணிப் போக்குவரத்து நேர அட்டவணை தயாரித்தல், நடைமுறைப்படுத்தல் மற்றும் பஸ் தரிப்பிட முகாமைத்துவ சேவைக் கட்டளை"** என பெயரிடப்படும். 2015, திசெம்பர் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து இக்கட்டளை அமுலாக்கப்பட்டதாக கருத்திற் கொள்ளப்படும்.

**2. நேர அட்டவணை தயாரித்தல் :**

2.1 கிழக்கு மாகாண சபையினுள் பேருந்து மூலம் பயணிகளை ஏற்றிச் செல்வது பயணிகளின் கேள்வி, தேவைகள் மற்றும் ஏனைய விடயங்களை கருத்திற் கொண்டு வீதிப்பயணிப் போக்குவரத்து அதிகார சபையினால் தயாரித்து அனுமதிக்கப்பட்ட **"பொது நேர அட்டவணை"** முறைமைக்கு ஏற்பவாகும். யாதாயினும் வீதியொன்றில் அல்லது பகுதியில் பயணிகளின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக முழு நாளும் செலுத்தப்பட வேண்டிய பேருந்துகளின் பயணத் தடவைகள் ஒரு பொது திட்டமிடலுக்கேற்ப தயாரித்து நடைமுறைப்படுத்துவது பொது நேர அட்டவணை மூலம் நிறைவேற்றப்படும். இதன் மூலம் அந்த அந்த வீதிகளில் பயணிகளின் தேவைகள் மற்றும் அவசியங்கள்

திருப்திகரமானதாக நிறைவேற்றப்படல் வேண்டும் என்பதோடு, பொல்லாங்கு விளைவிக்கும் போட்டியை தடுப்பதற்கும் வினைத்திறன்மிக்க ஓட்டத்திற்கு மற்றும் நிர்வாகத்திற்கும் இடமளிக்கும் வகையில் ஓட்டுநர்களுக்கிடையில் பொது நேர அட்டவணையில் ஓட்டப் பயணத் தடவைகளை நியாயமானதாக பகிரந்தளித்தலும் அதிகார சபையினால் பகிரந்தளிக்கப்படல் வேண்டும்.

2.2 பொது நேர அட்டவணை பயணிகளின் கேள்வி மாறுபடல், நடப்பு சேவைத் தேவைகள், நிர்வாக வசதி, சேவை திறனுள்ளதாக்குதல், நகரிடை தொடர்புபடும் சேவைகளை உருவாக்குதல், பயணிகள் பாதுகாப்பு மற்றும் வசதிகளை அதிகரித்தல் போன்ற பல்வேறு காரணங்களின் அடிப்படையில் திருத்துவதற்கு பயணிகள் போக்குவரத்து அதிகார சபை செயற்பட வேண்டும்.

2.3 பொது நேர அட்டவணை முறையிலிருந்து விலகி பயணிகள் போக்குவரத்துக்காக பேருந்துகளை ஈடுபடுத்துவதற்கு கேள்விகள் முன்வைக்கப்படின் பயனுள்ள வினைத்திறன்மிக்க பஸ் சேவை ஒன்றிற்காக குறித்த கேள்வி முக்கியமானதாகும் சந்தர்ப்பத்தில் கிழக்கு மாகாண வீதிப் பயணிப் போக்குவரத்து அதிகார சபைக்கு அதற்கான விசேட அனுமதி வழங்க முடியும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் பயணிகள் போக்குவரத்து பஸ் வண்டி ஓட வேண்டிய ஓட்டத் திட்டத்தை போக்குவரத்து அதிகாரசபையினால் அனுமதிக்கப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வாறான விசேட அனுமதியின்றி பொது நேர அட்டவணையை தவிர்ந்து எந்தவொரு நபருக்கும்/ கம்பனிக்கும்/ நிறுவனத்திற்கும்/ சபைக்கும் பயணிகள் போக்குவரத்திற்காக பஸ் வண்டிகளை ஈடுபடுத்தல் செய்ய முடியாது.

2.4 பாடசாலை பிள்ளைகளை மட்டும் ஏற்றிச் செல்கின்ற பாடசாலை பயணத் தடவைகள், காரியாலய சேவை, இரவு மற்றும் அதிகாலை ஓட்டங்கள் செய்வதற்கு விசேடமாக பெயரிடப்பட்ட சேவைகள், தபால் மற்றும் வேறு விசேடமான சேவைகள் தேவைக்குகேற்ப பொது நேர அட்டவணைகளில் இருந்து விலக்கி ஓட்டங்களை செயற்படுத்துவதற்கும், அதிகார சபைக்கு இயலும்.

2.5 பொது நேர அட்டவணை தயாரிக்கும் போது வீதிகளை தெரிவு செய்தல், பயண இலக்கை தீர்மானித்தல், வீதி இலக்கம் பெயரிடல், பயணிகளிடம் அறவிடப்பட வேண்டிய கட்டணங்கள் தயாரித்தல், ஓட்ட நேர பரிசீலனை மற்றும் ஓட்ட நேரத்தை தீர்மானித்தல், பயணிகள் மதிப்பீடு நடாத்துதல், பயணிகள் கேள்விகளை மதீப்பீடு செய்தல், சேவைகளை மீள் திட்டமிடுதல் மற்றும் திருத்துதல் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையினால் தேவையான சந்தர்ப்பங்களில் செய்யப்படல் வேண்டும். உரிய நடவடிக்கைகளை செய்யும் போது பின்பற்றப்பட வேண்டிய நியமங்களை பயணிகள் போக்குவரத்து அதிகார சபையினால் ஒழுங்கு விதிகளாக சட்டமாக்கப்படும்.

2.6 புதிய சேவைகளை ஆரம்பிக்கும் போது அதற்காக அரச பஸ் சேவை வழங்கப்படல் வேண்டுமா? இல்லையெனில், தனியார் பஸ் சேவை வழங்கப்பட வேண்டுமா என முன்வைக்கப்படுகின்ற கேள்விகளின் தன்மை மற்றும் ஓட்ட இயலுமைகளுக்கேற்ப அதிகார சபையினால் தீர்மானிக்கப்பட வேண்டும். புதிய வீதி பற்றிய மதிப்பீடு மற்றும் தகவல்களுக்கேற்ப போக்குவரத்து பிரேரணைகள் முன்வைக்கப்பட வேண்டும் என்பதோடு, அப்பிரேரணைகள் கருத்திற் கொள்ளப்பட்டு சேவை ஆரம்பிக்கப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்தல் வேண்டும்.

2.7 வேறு மாகாண சபையினுடைய போக்குவரத்து அதிகார சபையின் அல்லது வேறு யாதாயினும் அனுமதிப்பத்திரம் வழங்கும் அதிகார சபை அல்லது தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அல்லது இம்மாகாண சபை அதிகார எல்லைக்குள் பஸ் வண்டி ஒன்றை செலுத்துவதற்காக அனுமதிப்பத்திரமொன்றை வழங்குவதற்கு உத்தேசிப்பதாயின் அதற்காக கிழக்கு மாகாண வீதிப் பயணிப் போக்குவரத்து அதிகார சபையின் உடன்பாட்டை எழுத்து மூலமாக பெறப்படல் வேண்டும். அவ்வாறான சேவை பொது நேர அட்டவணை முறைமைக்கு தடங்கலாக அமையக்கூடாது என்பதோடு, தேவையற்ற போட்டி நிலமை இல்லாத வகையில் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் அனுமதிப்பத்திர அதிகார சபையின் மற்றும் ஓட்டுநரின் பொறுப்பாகும். நிலவுகின்ற பொது நேர அட்டவணைகளில் சேவையோடு சேர்த்து பொல்லாங்கு விளைவிக்கும் போட்டி உருவாகுதல் அல்லது ஏற்பட இயலுமாதல், வேறு சேவையோடு முரன்பாட்டு நிலைமை எழுதல் அல்லது எழுவதற்கு இடமிருத்தல், ஏனைய ஓட்ட நேர அட்டவணைகளின் வருமானத்திற்கு கடுமையான சேதம் ஏற்படும் மாகாணத்துக்கிடையிலான சேவைகள் தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக ஓட்டுவதை இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**3. நேர அட்டவணைகளை நடைமுறைப்படுத்தல் :**

3.1 பயணிகளை ஏற்றிச் செல்கின்ற அனைத்து பஸ் வண்டிகளுக்கும் பஸ் வண்டியின் இலக்கம், ஓட்டவேண்டிய பயணத் தடவைகள், பஸ் முடிவுமுனைக்கு உட்படுத்த வேண்டிய மற்றும் வெளியேற வேண்டிய நேரங்கள், நேர அட்டவணை நடைமுறைப்படுத்தும் திகதி மற்றும் ஏனைய சகல விபரங்கள் அடங்கியதாக அதிகார சபையினால் வழங்கப்பட்டுள்ள

செல்லுபடியான நேர அட்டவணை இருக்க வேண்டும் என்பதோடு, பரிசீலிக்கும் போது முன்வைக்கப்படல் வேண்டும்.

3.2 நேர அட்டவணையை நடைமுறைப்படுத்தும் போது, பயணிகள் தேவை பற்றிய அதிக கவனத்துடன் தேவையான சந்தர்ப்பத்தில் ஓட்டத்தரப்பினருடன் கலந்தாலோசித்து நடைமுறைப்படுத்த வேண்டும். நேர அட்டவணையின் பிரச்சினைகள் நிலவின் அது பற்றி செலுத்துநர்கள் அதிகார சபைக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதோடு, இருவார ஓட்டத்தின் பின்னர் அதுபற்றி மீண்டும் மீளாய்வு செய்து தகுந்த திருத்தத்துடன் நடைமுறைப்படுத்துவதற்கு அதிகார சபை செயற்படல் வேண்டும்.

3.3 பஸ் வண்டி உரிய நேர அட்டவணைக்கேற்ப அனுமதிப்பத்திரதாரர் பஸ் வண்டியை ஓட்ட வேண்டும் என்பதோடு, அவசர வீதித் தடை அல்லது வீதிக் கடமையில் ஈடுபடுகின்ற உத்தியோகத்தர்களின் அறிவுறுத்தலின் பேரில் அல்லது அதிகார சபையின் எழுத்துமூல அனுமதியின்றி நேர அட்டவணையை மாற்றி ஓட்டங்களை செய்யக்கூடாது. நேர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சேவைகள் இடைவழியில் திரும்புதல் அல்லது நிறுத்துதல் செய்யக்கூடாது. அனைத்து பயணத் தடவைகள் தீர்மானிக்கப்பட்டுள்ள நேரத்திற்கு ஓட்டம் செய்தல் வேண்டும்.

3.4 அதிகார சபையினால் தயாரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு வழங்கப்படுகின்ற நேர அட்டவணையை பொறுப்பேற்றலை மறுத்தல், அல்லது நடைமுறைப்படுத்துவதில் விலகியிருத்தல் ஓட்டக்காரரால் செய்தலாகாது.

3.5 அந்த அந்த வீதிகளில் பொது நேர அட்டவணை மூலம் ஒரு தினத்திற்கு திட்டமிடப்பட்டுள்ள சகல பயணத் தடவைகள் உரிய நேர அட்டவணைக்கேற்ப ஓட்டம் செய்விப்பது அதிகார சபையின் நிலைய கட்டுப்பாட்டாளர்களின் மற்றும் நேரப் பதிவாளர்களின் பிரதான பணிகளாகும் என்பதோடு, சில சில காரணங்களின் அடிப்படையில் உரிய பஸ் வண்டி ஓட்டத்திற்கு சமுகமளிக்காததால் ஓட்டத்தில் குறைகின்ற பயணத் தடவைகள் அவசர மாற்றீட்டு பஸ் வண்டி அல்லது அனுமதிப் பத்திரத்துடனான வேறு பஸ் வண்டியை பயன்படுத்தி ஓட்டுவதற்கு அவர்கள் மூலம் நடவடிக்கை செய்யப்படல் வேண்டும். அவ்வாறு ஓட்டத்திற்கு உரிய பஸ் வண்டி தொடர்ந்து 14 நாட்களுக்கு மேற்பட்ட காலத்திற்கு ஓட்டத்திற்காக சமுகமளிக்காதிருப்பின் அதுபற்றி அதிகார சபையின் உயர் முகாமைத்துவத்திற்கு அறிக்கையிடல் வேண்டும்.

3.6 பொது நேர அட்டவணையில் அனுமதிக்கப்பட்ட அனைத்து பயணத் தடவைகள் ஓட்டுவதற்குரியதாக கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் அவ்வப்போது அதிகார சபையினால் ஒழுங்கு விதிகளாக சட்டமாக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். குறைகின்ற பயணத் தடவைகளின் ஓட்டத்திற்கு இடமளிக்கின்ற போது உரிய வீதியின் சகல ஓட்டுநர்களுக்கும் பகிர்ந்து செல்லும் வகையில் அல்லது தொடர்ச்சியான ஓட்டத்திற்கு நிரந்தர ஓட்டுநர் ஒருவரை நியமித்தலோ அதிகார சபையினால் செய்யப்படல் வேண்டும்.

3.7 பொது நேர அட்டவணையில் ஒரு தரப்பினருக்கு உரிய சதவீதத்திற்கு குறைவான பயணத் தடவைகளின் எண்ணிக்கை கிடைக்கப்பெறுமிடத்து நேர அட்டவணை திருத்தத்தின் போது அல்லது செய்யப்படுகின்ற நியாயமான விண்ணப்பத்திற்கோ பஸ் வண்டிக்கு பயணத் தடவைகள் வழங்குகையில் குறைவான பயணத் தடவைகளின் எண்ணிக்கை கிடைத்த தரப்பினருக்கு முன்னுரிமை வழங்குவதற்கு அதிகார சபைக்கு இயலும்.

3.8 பஸ் வண்டி முடிவிடத்திற்கு பஸ் வண்டி ஒன்றை கொண்டு செல்ல வேண்டியது பயணிகள் மேடைக்கு பஸ் வண்டியை உட்படுத்துவதற்கு உரிய நேரத்திற்கு 5– 10 நிமிடங்களுக்கிடையில் உரிய லொக் பத்திரத்தை பெற்றுக்கொண்டு அல்லது பதிவு செய்து விட்டு வெளியாக வேண்டிய உரிய நேரத்திற்கு பஸ் நிறுத்தி வைக்குமிடத்திலிருந்து வெளியாகுவதற்கு இயலுமான வகையிலாகும்.

3.9 மேடையில் பஸ் வண்டியை நிறுத்தி வைக்கப்பட்டுள்ள காலத்திற்குள் வரிசையில் நிற்கும் பயணிகளுக்கு நுழைவு அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டு பஸ் வண்டியினுள் ஏற்றப்படல் வேண்டும் என்பதோடு, உரிய லொக் பத்திரத்தை பெற்றுக்கொண்டு வெளியேற வேண்டிய உரிய நேரத்திற்கு பஸ் வண்டி முடிவிடத்திலிருந்து வெளியேறல் வேண்டும்.

3.10 பஸ் வண்டி ஓட்டத்தின் போது, இடைநடுவே வேண்டுமென்றே தாமதப்படுத்தி பயணிகளின் பயணத்தை தாமதிக்கச் செய்தல் அல்லது மற்றைய ஓட்டுநர்களினுடைய பயணத் தடவைகளில் அவர்களின் வருமானத்திற்கு தாக்கம் விளைவிக்கும் வகையில் ஓட்டம் செய்யக்கூடாது என்பதோடு, பயணிகள் பாதுகாப்பிற்கு தாக்கம் ஏற்படும் வகையில் அதிக வேகத்தில் செலுத்துதலும் செய்தலாகாது.

3.11 பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லல், விசேட விழாக்கள், கூட்டம் அல்லது மக்கள் ஒன்று கூடுகின்ற சந்தர்ப்பங்களில் பொது நேர அட்டவணை முறைமைக்கு மேலதிக பயணத் தடவைகள் தேவைக்கேற்ப ஈடுபடுத்தல் செய்ய அதிகார சபைக்கு இயலும்.

3.12 யாதாயினும் பஸ் வண்டி ஒன்றிற்கு வழங்கப்பட்டுள்ள நேர அட்டவணையில் கட்டாயமாக ஓட்டம் செய்ய வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ள பயணத் தடவை தொடர்ச்சியாக ஓட்டம் செய்வதற்கு அனுமதிப்பத்திரதாரரால் சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

3.13 ஒவ்வொரு ஓட்டக்காரர்களும் செய்ய வேண்டிய பயணத் தடவைகள் ஓட்ட இலக்கத்திற்கேற்ப வேறுபடுத்தி வழங்கப்பட்டுள்ளதோடு, வேறுபடுத்தி வழங்கப்பட்டுள்ள பயணத் தடவைகளை மாற்றி ஓட்டம் செய்தலாகாது. அவ்வாறான மாற்றம் தேவைப்படுமிடத்து அதிகார சபைக்கு முனவைத்து ஓட்ட இலக்கங்களில் பயணத் தடவைகள் திருத்தம் செய்யப்படல் வேண்டும்.

**4. பஸ் வண்டி முடிவிடத்தின் ஒழுங்கமைப்பும் முகாமைத்துவமும் :**

4.1 கிழக்கு மாகாண சபை நியாயாதிக்கத்திற்குட்பட்ட பொது நேர அட்டவணை முறைமைக்கேற்ப ஓட்டம் செய்கின்ற அனைத்து பஸ் வண்டிகளும் வினைத்திறனுள்ளதாகவும் மற்றும் நியாயமானதாகவும் நிர்வகித்து ஒழுங்குமுறையிலமைந்த பயணிகள் போக்குவரத்துச் சேவையொன்றை பயணிகள் சமூகத்திற்கு வழங்குவதற்காக சகல பஸ் வண்டி முடிவிடங்களிலும் பஸ் வண்டிச் சேவை முகாமைத்துவத்தை பயணிகள் போக்குவரத்துச் சபையினால் செயற்படுத்தல் வேண்டும்.

4.2 போக்குவரத்து அதிகார சபையின் அனுமதியின்றி வேறு எவ்வாளுக்கும் அல்லது நிறுவனத்திற்கும் பஸ் வண்டி முடிவிடத்திற்கு பஸ் வண்டியை உட்செலுத்துதல், வெளிச் செலுத்துதல், ஆவணங்களை பதிவு செய்தல், அல்லது பயணிகளை ஏற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல், கூச்சலிட்டு பயணிகளை ஒன்று கூட்டல், ஆசனங்களை வேறுபடுத்தல் மற்றும் பஸ் சேவை முகாமைத்துவதற்கு உரித்தான எதையும் செய்தலாகாது.

4.3 பயணிகளுக்கு போதுமான மற்றும் ஆரோக்கியமான பஸ் சேவையினை வழங்குவதற்கான இயலுமான வகையில் மற்றும் சகல ஓட்டுநர்களுக்கும் அதற்கான நிலைய வசதிகளை செய்து கொடுப்பதற்கியலுமான வகையில் ஒழுங்குமுறையிலமைந்த சேவை நிர்வாகத்தை இலகுபடுத்துவதற்காக கிழக்கு மாகாணத்தின் சகல பஸ் வண்டி முடிவிடங்களையும் சுதந்திரமான உபயோகத்திற்கு பயணிகள் போக்குவரத்து அதிகார சபைக்கு நிரந்தரமாக அல்லது தற்காலிகமாக ஒப்படைத்தலோ அல்லது விடுவித்தலோ செய்தல் வேண்டும்.

4.4 மாகாணத்திற்குள் நிறுவப்பட்டுள்ள சகல பஸ் வண்டி முடிவிடங்களும் சரியான வகையில் சேவைகளை நிர்வகித்தல் போக்குவரத்து அதிகார சபையின் பொறுப்பாகும். அந்த பஸ் வண்டி முடிவிடங்களை பராமரிப்பது அதிகார சபையின் அனுமதிக்கோ அல்லது இணக்கப்பாட்டிற்கோ ஏற்ப உரிய மாகாண நிர்வாக அமைப்பினால் செய்யப்படல் வேண்டும்.

4.5 பயணிகள் போக்குவரத்து பஸ் சேவை முகாமைத்துவம் அல்லது பஸ் வண்டி முடிவிட வசதிகளை வழங்குவதற்காக சட்டப்படி போக்குவரத்து அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய பணத் தொகை தவிர, பயணிகள் போக்குவரத்து அனுமதிப்பத்திரத்தை உடைய ஓட்டுநர் அல்லது சேவையாளர் வேறு நபருக்கோ அல்லது நிறுவனத்திற்கோ எதுவித பணமும் செலுத்துதலாகாது.

4.6 பஸ் வண்டி முடிவிடத்தில் பஸ் வண்டி நடத்துவதற்கு, முகாமைத்துவத்திற்கு அறிவுறுத்தல் வழங்குதல் மற்றும் விபரங்களை பெற்றுக்கொள்வதற்கு, பயணிகளின் மற்றும் ஓட்டுநர்களின் பிரச்சினைகளுக்கு தகுந்த தீர்வுகளை வழங்குவதற்கு அதிகார சபையினால் நியமிக்கப்பட்டுள்ள நிலைய பொறுப்பு உத்தியோகத்தர்கள், நேரப் பதிவாளர்கள் மற்றும் நடமாடும் பரிசோதகர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.7 பஸ் தரிப்பிட நிலையத்தில் சேவையாற்றும் சகல உத்தியோகத்தர்களும் சீருடையுடன் அல்லது இலச்சினை மற்றும் அதிகார சபையினால் வழங்கப்படும் அடையாள அட்டையுடன் சேவையில் ஈடுபடல் வேண்டும். அவ்வாறல்லாத யாதாயினும் நபரொருவர் அல்லது நிறுவனம் பஸ் சேவை முகாமைத்துவதற்திற்கு தொடர்புபடுவதை தடுப்பதற்கும் மற்றும் சட்டத்தினால் நடவடிக்கை எடுக்க பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு மற்றும் அதிகார சபையின் உத்தியோகத்தர்களுக்கு இயலும்.

4.8 பஸ் தரிப்பிட நிலையத்தில் அதிகார சபையினால் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தரால் பஸ் சேவை முகாமைத்துவத்திற்கு உரித்தானதாக வழங்கப்படுகின்ற சகல சட்டப்படியான கட்டளைகள் மற்றும் அறிவுறுத்தல்கள் பஸ் தரிப்பிட நிலையத்தில் ஏனைய சகல தரப்பினரும் ஏற்றுக்கொள்ளல் வேண்டும். அதன்படி செயற்படல் வேண்டும்.

4.9 பஸ் தரிப்பிட நிலையத்தினுள் பயணிகளின், ஓட்டுநர்களின், சேவகர்களின், தெரிந்து கொள்ளலுக்கு அவசியம் என அதிகார சபை உத்தேசிக்கின்ற பிரச்சார நடவடிக்கைகள், தகவல் வழங்குதல், நேர அட்டவணை காட்சிப்படுத்தல் மற்றும் வேறு அவ்வப்போதைய தேவைகளுக்குப் பொருந்தும் வகையில் விபரங்களை முன்வைப்பதற்கு அதிகார சபை நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.10 அதிகார சபையின் அனுமதி அல்லது உடன்பாடின்றி பஸ் வண்டி தரிப்பிட நிலையத்தில் அல்லது பஸ் வண்டிக்குள் வியாபாரம் செய்தல் அல்லது பிரச்சார நடவடிக்கைகள் செய்தலாகாது.

4.11 பஸ் தரிப்பிட நிலையத்தில் பயணிகளுக்கு இடையூறு ஏற்படும் வகையில் தரித்து நிற்றல், புகை பிடித்தல், குடிபோதையில் நடத்தல், பிரச்சார நடவடிக்கைகள் போன்றவற்றை செய்தலாகாது.

4.12 புதிய பஸ் தரிப்பிட நிலையம் நிர்மாணிக்கும் போது அதிகார சபையின் அனுமதி பெறப்படல் வேண்டும் என்பதோடு, விதிக்கப்பட்ட நியமங்களுக்கேற்ப நிர்மாணிப்பு செய்தல் வேண்டும். பஸ் தரிப்பிட நிலையமொன்று பஸ் சேவை ஆரம்பிக்கின்ற மற்றும் முடிவடைகின்ற இடமாகவிருப்பதோடு, பயணிகள் ஏறுகின்ற இறங்குகின்ற மற்றும் மாறுகின்ற இடமாக கருத்திற் கொள்ளல் வேண்டும். அது தொகுதி பஸ் சேவை முகாமைத்துவ நிலையமாகும். அதன்படி பஸ் சேவை நிர்வாகத்திற்கு வசதிகளை வழங்குதல், பயணிகளுக்குத் தேவையான வசதிகளை வழங்குதல், பஸ் வண்டிகளை நிறுத்துவதற்கான வசதிகள் மற்றும் சேவகர் வசதிகள் பற்றிய அடிப்படை கவனத்துடன் நிர்மாணிப்புச் செய்யப்படல் வேண்டும். பஸ் தரிப்பிட நிலையம் ஒன்றில் அத்தியாவசிய அடிப்படை விடயங்களுக்கு இடையூறு அல்லது நிர்வாகத்திற்கு பிரச்சினை எழுப்புகின்ற வெளிவாரியான நிர்மாணிப்பு அல்லது செயற்பாடுகளை செய்தலாகாது.

4.13 இக்கட்டளைகளின் அமுல்படுத்தலை தடுத்தல் அல்லது மீறுதல் குற்றமாகும் என்பதோடு, சட்டத்தின் பிரகாரம் அதற்கான சட்டப்படியான நடவடிக்கை எடுக்கப்படும்.

4.14 பொது நேர அட்டவணை முறைமையின் கீழ் கிழக்கு மாகாண நியாயாதிக்கத்திற்குள் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையினால் பஸ் சேவை முகாமைத்துவம் செய்யப்படுகின்ற பஸ் தரிப்பிட நிலையங்கள் அட்டவணை 1 இல் காட்டப்பட்டுள்ளது.

### அட்டவணை 1

**1. அம்பாறை மாவட்டம் :**

1.1 அம்பாறை பிரதான பஸ் தரிப்பிட நிலையம்
1.2 கல்முனை பஸ் தரிப்பிட நிலையம்
1.3 அக்கரைப்பற்று பஸ் தரிப்பிட நிலையம்
1.4 திருக்கோவில் பஸ் தரிப்பிட நிலையம்
1.5 பொத்துவில் பஸ் தரிப்பிட நிலையம்
1.6 பானம பஸ் தரிப்பிட நிலையம்
1.7 மஹஒய பஸ் தரிப்பிட நிலையம்
1.8 பதியதலாவ பஸ் தரிப்பிட நிலையம்
1.9 தெஹியத்தகண்டிய பஸ் தரிப்பிட நிலையம்

**2. மட்டக்களப்பு மாவட்டம் :**

2.1 மட்டக்களப்பு பிரதான பஸ் தரிப்பிட நிலையம்
2.2 கொக்கட்டிச்சோலை பஸ் தரிப்பிட நிலையம்
2.3 களுவாஞ்சிக்குடி பஸ் தரிப்பிட நிலையம்
2.4 ஆரையம்பதி பஸ் தரிப்பிட நிலையம்
2.5 காத்தான்குடி பஸ் தரிப்பிட நிலையம்
2.6 செங்கலடி பஸ் தரிப்பிட நிலையம்
2.7 பிள்ளுமலை பஸ் தரிப்பிட நிலையம்
2.8 களுவாஞ்சிக்குடி பஸ் தரிப்பிட நிலையம்
2.9 வாழைச்சேனை பஸ் தரிப்பிட நிலையம்

**3. திருகோணமலை மாவட்டம் :**

3.1 திருக்கோணமலை பிரதான பஸ் தரிப்பிட நிலையம்
3.2 மூதூர் பஸ் தரிப்பிட நிலையம்
3.3 கிண்ணியா பஸ் தரிப்பிட நிலையம்
3.4 கந்தளாய் பஸ் தரிப்பிட நிலையம்
3.5 புல்மோட்டை பஸ் தரிப்பிட நிலையம்
3.6 பதவி - சிறீபுர பஸ் தரிப்பிட நிலையம்

*4- 431*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.